# <u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.. 90/2020 தேதி- 27.01.2026

(P.W.1) . நாகம்மாள்

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் பாதை அவகாசம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் ஏ பட்டிகை சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 26 சென்ட் ஆகும். பி பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் 650 சதுர லிங்ஸ் ஆகும். வழக்கு பட்டிகை சொத்து எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் 1982 ஆம் வருடம் இயற்கை எய்தினார். எனது தகப்பனார் இறந்த பிறகு எனக்கும் 2 ஆம் வாதிக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். பிரதிவாதிதான் எனக்கு மற்றும் எனது தங்கைகளுக்கு திருமண ஏற்பாடு செய்தாரா என்றால் வரண் பார்த்தது பிரதிவாதிதான். ஆனால் திருமண செலவை நாங்கள் பார்த்துக்கொண்டோம். நான் என்ன வேலை செய்வேன் என்றால் கட்டில், செயர் பின்னும் தொழில் மற்றும் துணி தைக்கும் தொழில் செய்து வந்தேன்.

நான் சேமித்து வைத்த பணத்திற்கு ஆவணம் ஏதாவது வைத்துள்ளேனா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. எனக்கும் எனது தங்கைகளுக்கும் பிரதிவாதிதான் திருமண செலவை செய்து வைத்தார் என்றால் சரியல்ல. பி பட்டிகை சர்வே சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4.250 சென்ட் ஆகும். பி பட்டிகை சொத்தின் ரீசர்வே எண் 751/8 ஆகும். பி பட்டிகை சர்வே சொத்தில் எனது அம்மாவும் பிரதிவாதியும் எவ்வளவு சொத்தை விலைக்கு கொடுத்தார்கள் என்றால் 3 சென்ட் 600 சதுரலிங்ஸ் சென்ட் சொத்தை கிரையம் கொடுத்தார்கள். வா.சா.ஆ. 2 ஆவணத்தை நான் படித்து பார்த்தேன். அதிலுள்ள சங்கதிகள் எல்லாம் உண்மைதான்.

பி பட்டிகை சர்வே எண் சொத்தை வினு என்பவருக்கு எனது அம்மாவும் பிரதிவாதியும் விலைக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் நான் கட்சி இல்லை என்றால் சரிதான். எனது சகோதரியான 2 ஆம் வாதி அதில் கட்சி இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணத்தில் எனது அம்மா மற்றும் பிரதிவாதியை தவிர வேறு யாரும் வாரிசுகள் அல்ல என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எனது அம்மா மற்றும் பிரதிவாதி வினுவிற்கு

விற்ற சொத்துதான் பாதையாகும்.

நான் மாண்புமிகு பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 276/2012 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பி பட்டிகை சர்வே சொத்தை வழக்கு பட்டிகை சொத்தாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பி பட்டிகை சர்வே சொத்தில் எனக்கு அவகாசம் இல்லாததால்தான் மேற்படி வழக்கில் அதை வழக்கு பட்டிகை சொத்தாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வினுவிற்கு விற்ற சொத்தை குறித்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

வா.சா.ஆ. 2 ஆவணத்தில் பிரதிவாதிக்கும் எனது அம்மாவிற்கும் உரிமைப்பட்ட சொத்தாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ- 2 ஆவணத்தில் பாதை அவகாசம்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. பி பட்டிகை சொத்தில் எனக்கு எந்த அவகாசமும் இல்லாததால்தான் அசல் வழக்கு எண். 276/2012 என்ற வழக்கில் பி பட்டிகை சொத்தை வழக்கு சொத்தாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பி பட்டிகை சொத்தை நான் அனுபவித்ததாக காட்டுவதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு அதில் எந்த உரிமையும் இல்லாததால்தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

பி பட்டிகை சொத்திலிருந்து எ பட்டிகை சொத்து 8 அடி உயரம் இருக்கும் என்றால் சரியல்ல. வினுவிற்கு கொடுத்த சொத்திலிருந்து எ பட்டிகை சொத்து எவ்வளவு உயரம் இருக்கும் என்றாலும் கிழக்கிலிருந்து மேற்காக எவ்வளவு உயரம் இருக்கும் என்றால் சரிவான பூமியாக இருக்கிறது. பி பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கம் எனது தம்பியான பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் 751/7 எ 2 என்றால் சரிதான். மேற்படி சொத்தும் பி பட்டிகை சொத்து தற்போது சமமாகத்தான் இருக்கிறது. பி பட்டிகை சொத்திலும் பிரதிவாதி வாங்கிய சொத்திலும் வீடு வைத்துள்ளார் என்றால் பாதையை அடைத்து வீடு வைத்துள்ளார்.

பிரதிவாதிக்கும் எனது அம்மாவிற்கும் உரிமைப்பட்ட சொத்து என்பதால்தான் வீடு வைத்துள்ளார் என்றால் அது பொது சொத்தாகும். பிரதிவாதி தற்போது வீடு வைத்திருப்பதற்கு வடக்கு பக்கம் ஒரு பாதை இருக்கிறது என்றால் அது பொதுப்பாதை இல்லை அது தனிநபரின் பாதையாகும். மேற்படி வடக்கிலிருக்கும் பாதைக்கு பஞ்சாயத்தால் காங்கிரீட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

பாதையிலிருந்து வடக்கிலிருந்து தெற்காக ஒரு பாதை எ பட்டிகை சொத்திற்கு செல்கிறது என்றால் சரிதான். வடக்கிலிருந்து தெற்காக செல்லும் பாதையை யார் வாங்கியது என்றால் பிரதிவாதி வாங்கியது ஆகும். மேற்படி பாதை வழியாக சென்றால் எ பட்டிகை சொத்திற்கு செல்ல முடியுமா என்றால் செல்லமுடியும் ஆனால் அவர்கள் பாதை அவகாசம் அதில் கொடுக்கவில்லை.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் பார்த்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் வந்தபோது வடக்கிலிருந்து தெற்காக செல்லும்பாதை வழியாக வந்துதான் எ மற்றும் பி பட்டிகை சொத்தை அளந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பாதை அடைப்பு எதுவும் இல்லாமல்தான் இருக்கிறது என்றால் ஆணையர் வரும்போது அடைப்பு எதுவும் இல்லை நாங்கள் செல்லும்போது வழியை அடைத்துவிடுவார்கள். எனது தம்பியின்மேல் உள்ள காழ்புணர்ச்சியினால் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எ பட்டிகை சொத்தில் பிரதிவாதிக்கு உரிமையிருக்கிறது. பிரதிவாதி எ பட்டிகை சொத்திற்கு செல்ல வேண்டுமென்றால் மேற்படி வடக்கு தெற்கு பாதை வழியாகத்தான் செல்லவேண்டுமென்றால் பி பட்டிகை சொத்தை அடைத்ததால் மேற்படி பாதை வழியாகத்தான் செல்லவேண்டும்.

பி பட்டிகை சொத்தில் பிரதிவாதியின் வீடு இருப்பதால் அதை பாதையாக பயன்படுத்த முடியாது என்றால் எங்களுக்கு பாதை அவகாசம் தரக்கூடாது என்பதால் வீடு வைத்தார். விலை வாங்கிய சொத்தில் வசதியாக பாதை அவகாசம் தந்துவிட்டுதான் பி பட்டிகை சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் அங்கு பாதை அவகாசம் இல்லை. பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வினுவிற்கு கிரையமாக கொடுத்த சொத்தின் தெற்கு பக்கம் வழிப்பாதை இருக்கிறது என்றால் பாதை இருக்கிறது அதை நாங்கள் பயன்படுத்த முடியாது. மேற்படி பாதையில் பஞ்சாயத்தாரால் இண்டர்லாக் டைல்ஸ் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதை எ பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் தொடுகிறது என்றால் சரிதான் ஆனால் 8 அடி தாழ்ந்துள்ளது.

வினுவிற்கு கிரையம் கொடுத்த சொத்தும் இண்டர்லாக் போடப்பட்ட பாதையும் சமமாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்து பாதை வினுவிற்கு

உரிமைப்பட்ட சொத்து மற்றும் பி பட்டிகை சொத்து சமநிலையாகத்தான் இருக்கிறது என்றால் சரியல்ல. 8 அடி தாழ்வாக உள்ளது என்று வழக்கிற்காக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வசதியான பாதையை உபயோகித்துகொண்டு பிரதிவாதி கட்டிய வீட்டை இடிக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6, வா.சா.ஆ. 7 புகார்மனு மற்றும் அதன் ரசீது வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வழக்கு அறிவிப்பு வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 9 முதல் வா.சா.ஆ. 13 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலம் எனக்கு உரிமையிருப்பதை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல, வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.